செ.வெ.எண்: 28 நாள்: 17.04.2019

## நாகப்பட்டினம் மாவட்டம்

**நடைபெறவுள்ள மயிலாடுதுறை பாராளுமன்ற தேர்தல் 2019-ஐ முன்னிட்டு அனைத்து வாக்குச்சாவடி மையங்களுக்கும் வாக்குப்பதிவு இயந்திரங்கள் கொண்டு செல்லும் பணிகள் நடைபெற்றுவருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார் இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி தமிழகத்தில் நாளை (18.04.2019) பாராளுமன்ற தேர்தல் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 28-மயிலாடுதுறை பாராளுமன்ற தொகுதியைப் பொருத்தவரை 1738 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அனைத்து வாக்குச்சாவடிகளிலும் தேர்தல் பணியாற்றும் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு உரிய பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.வாக்குப்பதிவு இயந்திரங்கள், VVPAT போன்றவற்றை எவ்வாறு கையாள்வது தொடர்பாகவும், வாக்குப்பதிவு இயந்திரங்கள் பழுதடைந்தாலோ அல்லது வேறு ஏதாவது தொழில்நுட்ப கோளாறு காரணமாக பழுதடைந்தாலோ அதனை உடனடியாக சரிசெய்திடும் விதமாக தேவையான தொழில்நுட்ப பணியாளர்கள் தயார்நிலையில் உள்ளனர். மயிலாடுதுறை பாராளுமன்ற தேர்தல் 2019-ஐ முன்னிட்டு அனைத்து வாக்குச்சாவடி மையங்களுக்கும் வாக்குப்பதிவு இயந்திரங்கள் கொண்டு செல்லும் பணிகள் நடைபெற்று வருகிறது.

வாக்குப்பதிவை கண்காணித்திட தேர்தல் பார்வையாளர்கள் 24 மணிநேரமும் வாக்குச்சாவடிகளையும் மற்றும் அனைத்து தேர்தல் தொடர்பான பணிகளையும் கண்காணித்தவண்ணம் உள்ளனர். அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் பாதுகாப்பினை உறுதிசெய்திடும் பொருட்டு சுமார் 2000 காவல்துறை பணியாளர்கள் தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மத்திய ரிசர்வ் படையானது வரவழைக்கப்பட்டு தேவையான இடங்களில் கண்காணித்திடும் வகையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இதுதவிர நகரில் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளை உடனுக்குடன் கட்டுப்பாட்டு அறைக்கு தெரிவித்திடும் வகையில் ரோந்துபணியில் மேற்கொள்ளும் வகையில் அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டு பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

இதுதவிர வாக்குச்சாவடி மையங்களில் ஆண்,பெண் வாக்காளர்கள் சிரமமின்றி வாக்களித்திட ஏதுவாக அனைத்து முன்னேற்பாடு பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் சிரமமின்றி வாக்களித்திட ஏதுவாக சக்கர நாற்காலிகள், தேவையான சாய்தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வாக்குச்சாவடி மையங்களில் தேவையான குடிநீர்வசதி, மருத்துவ வசதி போன்றவைகள் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன. எனவே பொதுமக்கள் தங்களது வாக்கினை 100 சதவீதம் தவறாமல் பதிவுசெய்து ஜனநாயக கடமை ஆற்றிடவேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது தரகம்பாடி வட்டாட்சியர் திரு.சுந்தரம் உட்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**